**கந்தகெடிய பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கந்தகெடிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டு ஜுன் 30 திகதி கந்தகெடிய மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,500,000 இற்கான நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெறவேண்டிய வட்டி ரூபா 86,250 தொகையினை கணக்கிற்கு எடுக்காமையினால் அந்த பெறுமதியினால் வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்த போது கிடைத்த கழிவு ரூபா 104,006 தொகைக்காக கிடைத்திருந்த புத்தகங்களின் பெறுமதியினை கணக்கீடு செய்யாமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கு அப்பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கேற்போர் கூட்டத்திற்கு ஒலிபெருக்கி கொள்வனவு செய்தல் தொடர்பாக செலுத்த வேண்டியிருந்த ரூபா 79,400 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 361,240 தொகை நீதிமன்ற தண்டப் பணம் நடைமுறை ஆண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்திருந்தமையினால் அந்த பெறுமதியினால் மிகை அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை முத்திரை கட்டணம் ரூபா 589,781 தொகை எனினும், அதனை ரூபா 387,130 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 202,650 தெகை குறைவாகக் காட்டப்ப்டிருந்தது.

(ஊ) அடுத்த வருடத்திற்காக கிடைத்திருந்த சுற்றாடல் அனுமதிப் பத்திர கட்டணம் ரூபா 63,874 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்திருந்தமையால் அப்பெறுமதியினால் மிகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு**

கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றில் திரண்ட நிதியம் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்குகளின் மீதிகளை மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாக கொண்டு வரும் போது ரூபா 6,794,367 இற்கான வித்தியாசமொன்று நிரூபனம் ஆகியிருந்தது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,208,488 தொகையாக பெறவேண்டிய கணக்கு மீதியில் செயற்திட்டங்கள் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து ஒரு ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 6,833,945 தொகை, வேறு வருமானங்கள் ரூபா 10,350 தொகை, 3 வருட காலம் முதல் காணப்படும் நிலுவை நீர் கட்டணம் ரூபா 296,694 தொகை மற்றும் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய முற்பணம் ரூபா 67,499 தொகை மீளாய்வாண்டின் போது அறவீடு செய்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 10,732,346 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில், ஒருவருட காலம் முதல் காணப்படும் பலவின செலவு கடன்கொடுத்தோர் ரூபா 3,644,384 தொகை, நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 5,971,406 தொகை, மற்றும் 7 வருட காலம் முதல் காணப்படும் ரூபா 1,116,556 தொகை என்பன மீளாய்வாண்டு இறுதிவரையும் செலுத்தியிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்காமையினால் கூட்டுத்தொகை ரூபா 16,636,205 தொகைக்கான காணிகள் கட்டிடங்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதி செய்வதற்கு மற்றும் மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158,159 | 298,599 | கடந்த ஆண்டின் நிலுவை வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் நிலுவை வருமானம் என்பன அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | 1980 இன் 47 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களின் திருத்தப்பட்ட 2008 ஜனவரி 25 திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | 120,000 | மீளாய்வாண்டு தொடர்பாக 305 வர்த்தகங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய சுற்றாடல் சார் அனுமதிப் பத்திர வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (இ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 218 | | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாப வருடாந்த கணிப்பீடு செய்து அறிக்கை ஒன்று பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன கோவையின் அத்தியாயம் xxiv பிரிவு 1.6 | 5,249 | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மூன்று ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் மீதி ஒன்றினை அறவீடு செய்திருக்காததுடன், அவை 14 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரை பழமையான மீதிகளாகும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 3,542,705 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,715,471 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல் கீழே காணப்படுகின்றன

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 2,459,112 | 2,459,112 | 2,061,632 | 397,480 | 2,074,645 | 2,074,645 | 1,465,267 | 609,378 |
| (ii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 648,000 | 648,000 | 648,000 | -- | 540,000 | 540,000 | 540,000 | -- |
| (iii) ஏனைய வரு மானங்கள் | 47,001,220 | 47,001,220 | 38,214,598 | 8,786,622 | 38,049,180 | 38,049,180 | 30,557,140 | 7,492,040 |
| மொத்தம் | 50,108,332 | 50,108,332 | 40,924,230 | 9,184,102 | 40,063,825 | 40,663,825 | 35,562,407 | 8,101,418 |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 50 மில்லியன் ஆக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 40 மில்லியன் ஆக இருந்தது. எவ்வாறாயினும் வருட இறுதியில் ரூபா 9.1 மில்லியன் வருமானம் ஒன்றினை சேகரிப்பதற்கு வேண்டியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் அறவீடு செய்தல் 13 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,659,943 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 387,130 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

1987 பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 126 இன் பிரகாரம் 30 முக்கிய விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணைவிதிகள் ஆக்கப்பட வேண்டுமெனினும், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 விடயங்களுக்காக துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டள்ள துனை விதிகளின் பிரகாரம் சபை நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(இ) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சார் சட்டத்திற்கு மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க (திருத்திய) மற்றும் 2000 இன் 53 இலக்க திருத்திய மற்றும் 2008 பெப்ரவரி 02 திகதி வர்த்தமானி இலக்க 1534/18 இன் பிரகாரம் குப்பைகளை வகைப்படுத்தி மீள் சுழற்ச்சி செய்யப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2018 மே 14 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

2015 ஜுலை 27 அம் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் நன்கொடையாக வழங்கியிருந்த ரூபா 24,928,666 தொகை பெறுமதியான மோட்டார் கிரேடர் இயந்திரத்தை இயக்குவதற்காக சாரதி ஒருவர் இண்மையால் 2018 பெப்ரவரி 20 திகதி வரையும் விளைவு இன்றி காணப்பட்டது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 41 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியண் 34 ஆகும். நீண்ட காலமாக 07 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

சபைக்கு சொந்தமான மயானங்களை சேர்ந்த காணி கட்டிடங்களை அளவை செய்து உரித்தாக்கப்பட வேண்டுமெனினும், சுமார் 40 ஏக்கர்களை கொண்ட மயானங்களை அளவை செய்து தீர்த்துக் கொண்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற சொத்துக்கள்**

நிறுவனத்திற்கு சொந்தமான சேதமடைந்துள்ள மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களை கைதவிப்பு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும், புத்தகப் பெறுமதி ரூபா 1,620,000 தொகை ஆகிய 05 வருடகாலமாக பயன்படுத்தப்படாமல் காணப்படும் டபல் கப் வண்டி ஒன்று, கைடிரக்டர் ஒன்று என்பவற்றை கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகை திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

சபையின் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) உள்ளவாறான வருமானத்தை பாதீட்டு வருமானத்துடன் இணக்கஞ் செய்த போதிலும் 06 விடயங்களில் முரண்கள் 3 சதவீதம் முதல் 108 வரையான வீச்சினைப் பெற்றிருந்தது.

(ஆ) 07 செலவு விடயங்களில் உள்ளவாறான செலவுகளை பாதீட்டு செலவுகளுடன் இணக்கஞ் செய்த போது முரண்கள் 4 சதவீதம் முதல் 93 சதவீதமான வீச்சினை பெற்றிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | | குறைபாடு |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) பொது வைப்புக்கள் காலப்பகுப்பாய்வு தயாரித்திருக்கவில்லை.<br>(ii) நிலையான வைப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யாமை.<br>(iii) பெற வேண்டிய வருமானத்தை கணித்திருக்காமை. |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) ஆண்டிற்கான சில வருமான மூலங்கள் சரியாக இனங்கண்டிருக்க வில்லை.<br>(ii) வருமானப் பதிவேடு நிரப்பியிருக் காமை. |
| (இ) | செயற்திட்டம்/ ஒப்பந்தவேலை | முற்பணத் தொகையினை அறவீடு செய்யாமை. |